திருப்பூரில் எலிகள் சாவு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் 1971 அக்டோபர் திங்களில் பல எலிகள் செத்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், பிளேக் நோய் கண்டது பற்றி ஏதேனும் நேர்வுகள் அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டனவா?

(உ) அது குறித்து எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மன்றத்தின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Government Hospital in Madurai.

*9. Thiru D. SANTOSHAM and Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether there is any proposal to start one more Government Hospital in Madurai;

(b) whether a private philanthropist has offered a large sum of money towards that hospital; and

(c) if so, the details thereof?

மதுரையில் அரசினர் மருத்துவமனை

திரு. டி. சந்தோஷம் &
திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் மேலும் ஒரு அரசினர் மருத்துவமனை தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) அந்த மருத்துவமனையைத் தொடங்க, தனியார் கொடையாளி ஒருவர் அதிகத் தொகை அளிக்க முன் வந்துள்ளாரா?

(உ) அதன் விவரங்கள் யாவை?

@ 93-ஆம் பக்கத்தில் I இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ)—(உ) மதுரை மாநகரில் ஒரு மருத்துவமனே கட்ட டி.வி.எஸ். அறக்கட்டளேயால் 5 லட்ச ரூபாய் நன் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனே கட்டுவதற்கான விவரங் களும் இதர செலவினங்களுக்கான விவரங்களும் மருத்துவக் கல்வி இயக்குந ரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. டி. சந்தோஷம் : தலேவர் அவர்களே, மதுரையில் புதியதாக அமைய விருக்கும் மருத்துவ மனே, மருத்துவக் கல்லூரியோடு இணைந்து செயல்படுவ தாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவர் அவர்களே, மதுரை எர்ஸ்கின் மருத்துவமனேயோடு தொடர்பு கொண்டதாக இருக்கும். ஆகவே கல்லூரிக் கும் இணைந்ததாகத்தான் இருக்கும்.

திரு. கே. ராஜாராம் : தலேவர் அவர்களே, மதுரையில் தற்போது தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள இடம் வைகைக்குத் தெற்கேயா அல்லது வடக்கேயா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவர் அவர்களே, நகரத்தின் வடக்குப் பக்கத்தில் ஏற்கனவே மருத்துவமனே உள்ளது. தெற்குப் பக்கத்தில் அமைவது பெரும்பாலோருக்கு வசதியாக இருக்கும் என்று கருதியதால், அங்கு அமைக் கப்படவிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I know when the donation was given to the Government by the T.V.S.?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவர் அவர்களே, ஏறத்தாழ மூன்று திங்களுக்கு முன்னல் மாவட்ட ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலேவர் அவர்களே, டி.வி.எஸ். ஸ்தாபனம் ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிருர்கள். திட்டமிட்ட அந்த மருத்துவ மனே கட்டி முடிப்பதற்கு எத்தனே இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவர் அவர்களே, திட்டவட்டமாக விடை தருவதற்கு இப்பொழுது விவரங்கள் இல்லே. இருந்தாலும் குறைந்தது 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலேவர் அவர்களே, அந்த மருத்துவ மனேக்குப் பெயர் வைக்க முடிவு செய்தாகிவிட்டதா ? ஆம் என்ருல் என்ன பெயர் என்று தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவர் அவர்களே, குழந்தை உண்டாகி யிருக்கிறது. பிறந்ததற்குப் பின்னுல்தான் பெயர் வைப்பது வழக்கம்.